RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-4 | இதழ்- 208 | ஜூலை.31 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5







## மருத்துவ மாணவர் சேர்க்கையில் சூட்டிங் பால் வீராங்கணைக்கு 900 மதிப்பெண்: ஐகோர்ட் உத்தரவு



மதுரை: ஜூலை.31-

மருத்துவ மாணவர் சேர்க்கையில் சர்வதேச சூட்டிங் பால் போட்டியில் தங்கம், வெண்கல பதக்கம் பெற்ற வீராங்கணைக்கு 900 மதிப்பெண் வழங்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் கீரனூரைச் சேர்ந்த சிவகுமார், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

என் மகள் ஹரினி சூட்டிங் பால் விளையாட்டு வீராங்கணை. கடந்த பிப்ரவரி மாதம் நேபாளத்தில் நடைபெற்ற ஆசிய சூட்டிங் பால் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றார்.

கடந்தாண்டு மார்ச் மாதம் டெல்லியில் நடைபெற்ற முதல் உலக கோப்பை சூட்டிங் பால் சேம்பியன் போட்டியில் வெண்கல பதக்கம் வென்றார். ஹரினி கடந்த மே மாதம் பிளஸ் 2 முடித்தார். இந்த ஆண்டு நடைபெற்ற நீட் தேர்வில் வெற்றி பெற்றார். விளையாட்டு பிரிவில் எம்பிபிஎஸ் சீட்டுக்கு விண்ணப்பித்தார்.

மருத்துவ மாணவர் சேர்க்கையில் விளையாட்டு பிரிவில் விண்ணப்பிப்பவர்களுக்கு சர்வதேச போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றால் 500 மதிப்பெண், வெள்ளி பதக்கம் வென்றால் 450 மதிப்பெண், வெண்கல பதக்கம் பெற்றால் 400 மதிப்பெண், போட்டியில் பங்கேற்றால் 250 மதிப்பெண் வழங்கப்படும். இந்த அடிப்படையில் 2 சர்வதேச போட்டிகளில் பெற்ற பதக்கங்கள் அடிப்படையில் 900 மதிப்பெண்ணை என் மகளுக்கு வழங்கி இருக்க வேண்டும்.

ஆனால் கடந்த 18 ந் தேதி நடைபெற்ற சான்றிதழ் சரிபார்ப்பின் போது சர்வதேச போட்டிகளில் பதக்கம் பெற்றதற்கு மதிப்பெண் வழங்க, அந்தப் போட்டிகளில் குறைந்தபட்சம் 7 நாடுகள் பங்கேற்று இருக்க வேண்டும், அவ்வாறு பங்கேற்காததால் தேசிய போட்டிகளில் பெற்ற பதக்கங்களுக்கு மதிப்பெண் வழங்க முடியாது என்றும், தேசிய அளவிலான போட்டியில் பதக்கம் பெற்றதற்காக 200 மதிப்பெண் மட்டும் வழங்குவதாகவும் தெரிவித்தனர்.

சூட்டிங் பால் போட்டி என்பது ஏழு பேர் அடங்கிய குழுவினர் விளையாடும் விளையாட்டு ஆகும். இப்போட்டிக்கு 7 நாடுகள் விதி பொருந்தாது. எனவே சர்வதேச போட்டியில் தங்கம், வெண்கல பெற்ற பதக்கங்களுக்கு 900 மதிப்பெண் வழங்கி, விளையாட்டு பிரிவில் எம்.பி.பி.எஸ். சீட் வழங்கவும், என் மகளுக்காக ஒரு எம்பிபிஎஸ் இடத்தை காலியாக வைக்கவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதி சி.சரவணன் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் கணபதி சுப்பிரமணியன் ஆஜராகி, மனுதாரர் மகள் சர்வதேச போட்டியில் பதக்கம் பெற்றதால் மத்திய அரசு பணிக்கு தகுதியானவர் என மத்திய அரசு சான்றிதழ் வழங்கியுள்ளது. அப்படியிருக்கும் போது 7 நாடுகள் பங்கேற்க சர்வதேச போட்டியில் பதக்கம் பெற்றதால் தான் மதிப்பெண் வழங்குவோம் என்பது சரியல்ல என்றார். அரசு தரப்பில் மருத்துவ மாணவர் கலந்தாய்வு முடிந்துள்ளது.

யாருக்கும் இதுவரை கல்லூரி ஒதுக்கீடு உத்தரவு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து நீதிபதிகள், மருத்துவ மாணவர் சேர்க்கையில் மனுதாரர் மகளுக்கு சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வென்றதற்காக 900 மதிப்பெண் வழங்கி அதன் அடிப்படையில் மருத்துவ சீட் வழங்க வேண்டும் என உத்தரவிட்டார்.

## கீழடி ஆய்வறிக்கைக்கு ஒப்புதல் பெற வேண்டியது திமுக அரசின் பொறுப்பு: இபிஎஸ்

சிவகங்கை: ஜூலை.31-

"அதிமுக ஆட்சியில் தான் முதன் முதலாக கீழடி அகழாய்வுப் பணிகள் தொடங்கின. அதிமுக ஆட்சியில் தான் கீழடியில் 5 கட்ட அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மத்திய அரசுக்கு தெளிவாக விளக்கமளித்து கீழடி ஆய்வறிக்கைக்கு ஒப்புதல் பெற வேண்டியது திமுக அரசின் பொறுப்பு" என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

சிவகங்கையில் உள்ள கீழடி அகழ் வைப்பகத்தை எடப்பாடி பழனிசாமி இன்று (புதன்கிழமை) பார்வையிட்டார். அதன் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: அதிமுக ஆட்சியில் தான் முதன் முதலாக கீழடி அகழாய்வு பணிகள் தொடங்கின. முதல் மூன்று கட்ட அகழாய்வுகளை கடந்த 2015 முதல் 2017 வரை மத்திய அரசு நடத்தியது. நான்காம் கட்ட அகழாய்வை மத்திய தொல்லியில் துறை அனுமதி பெற்று 2018ல் அதிமுக அரசு மேற்கொண்டது. கடந்த 2019ல் 5ம் கட்ட அகழாய்வு நடைபெற்றது.





அதிமுக ஆட்சியில் தான் கீழடியில் 5 கட்ட அகழாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது கிடைத்த தொல்பொருட்களை காட்சிப்படுத்த ரூ.12.5 கோடியில் கீழடி அகழ்வைப்பகம் அமைக்க அடிக்கல் நாட்டினோம். அதன் பிறகு தான் ஆட்சி மாற்றம் வந்தது.

அதிமுக அரசு 6 கரிம மாதிரிகளை அமெரிக்கா நாட்டில் புளோரிடா ஆய்வகத்துக்கு அனுப்பியதில், கீழடி நாகரிகத்தின் காலம் கிமு 6ம் நூற்றாண்டு என உறுதி செய்யப்பட்டது.

கடந்த 2018ல் நான் சட்டப்பேரவையில் பேசியபோது, 'கீழடி ஆய்வு நம் பாரம்பரிய பெருமையை உணர்த்துவதில் முக்கிய பங்காற்றுகிறது' என குறிப்பிட்டேன். அதிமுக அரசு, அமெரிக்கா சிகாகோ நகரில் உலகத் தமிழ் மாநாடு நடத்த நிதியுதவி செய்தது. அங்கு முதன்முறையாக கீழடியில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களை காட்சிப்படுத்தினோம். அந்த கண்காட்சிக்கு 'கீழடி என் தாய்மடி' என பெயரிடப்பட்டது.

மேலும் 6,720 தொல்பொருட்களை மதுரை உலகத் தமிழ் சங்க வளாகத்தில் வைத்து கண்காட்சியை தொடங்கி வைத்தோம். கடந்த 2020ல் சென்னை புத்தக கண்காட்சி அரங்கத்திலும் கீழடி தொல் பொருட்களை காட்சிக்கு வைத்தோம். ஆனால் கீழடியை வைத்து சிலர் அரசியல் செய்கின்றனர்.

தொல்லியல் துறைக்கு அதிமுக அரசு 4 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் ரூ.105 கோடி நிதி ஒதுக்கியது. தமிழகத்தில் நடந்த 39 அகழாய்வுகளில் 33 அகழாய்வில் அதிமுகவுக்கு பங்கு உண்டு. மைசூரில் மத்திய அரசு கட்டுப்பாட்டில் இருந்த 10,000க்கும் மேற்பட்ட தொல்பொருட்களை தமிழகத்துக்கு கொண்டு காட்சிப்படுத்திய பெருமை அதிமுக அரசுக்கு உண்டு.

கீழடி அகழாய்வு மிக முக்கியமானது. இதில் எந்த தவறும் நடந்துவிடக் கூடாது. கீழடி அகழாய்வு அறிக்கையில் மத்திய அரசு என்ன விளக்கம் கேட்டது? . திமுக அரசு என்ன விளக்கம் கொடுத்தது என்பது பற்றி எங்களுக்கு தெளிவாக தெரியவில்லை. அதற்கு சரியான விளக்கத்தை கொடுத்து கீழடி ஆய்வறிக்கைக்கு ஒப்புதல் பெற வேண்டியது திமுக அரசின் பொறுப்பு. கீழடி ஆய்வுக்கு அனுமதி கிடைக்க வேண்டும் என்பது தான் எங்களது நிலைப்பாடு. கீழடி விவகாரத்தில் மாநில அரசின் முயற்சிகளுக்கு நாங்கள் துணை நிற்போம்.

தமிழகத்தில் 196 அரசு கலை கல்லூரிகளில் 96ல் மட்டுமே முதல்வர்களே இல்லை. பல கல்லூரிகளில் பேராசிரியர்களோ, மற்ற பணியாளர்களோ இல்லை. மருத்துவத் துறையிலும் ஏராளமான பணியிடங்கள் காலியாக உள்ளன. டீன்களே நியமிக்க முடியவில்லை.

2021ல் திமுக தேர்தல் அறிக்கையில் 5 லட்சம் காலிப்பணியிடங்கள் இருப்பதாக கூறி நிரப்புவதாக கூறினார்கள். திமுக ஆட்சியில் 50 ஆயிரம் காலிப் பணியிடங்களை மட்டுமே நிரப்பி உள்ளனர். காலிப்பணியிடங்கள் அதிகரித்ததால் நிர்வாகம் முறையாக செயல்பட முடியவில்லை. அனைத்து துறைகளிலும் தமிழகம் பின்னடைவு அடைந்திருப்பதற்கு இந்த அரசு முறையாக செயல்படாததே காரணம். இவ்வாறு அவர் கூறினார்.

## 1967, 1977 தேர்தல்களைப் போல 2026 தேர்தல் இருக்கப் போகிறது: தவெக தலைவர் விஜய்

சென்னை: ஜூலை.31-

தமிழக வெற்றிக் கழகத்தின் உறுப்பினர் சேர்க்கைக்கான பிரத்யேகச் செயலி அக்கட்சியால் வெளியிடப்பட்டுள்ளது. இதனை அக்கட்சியின் தலைவர் விஜய் இன்று அறிமுகம் செய்தார். இதில், தவெக மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் விஜய் பேசியதாவது: இதற்கு முன்னால் தமிழக அரசியலில் நடந்த மிகப்பெரிய இரண்டு தேர்தல்களைப் போல 2026 தேர்தலும் அமையப் போகிறது. அந்த இரண்டு மாபெரும் தேர்தல்களில் ஏற்கெனவே தொடர்ந்து ஜெயித்துக் கொண்டிருந்த அதிகார பலம், அசுர பலம் அனைத்தையும் எதிர்த்து நின்றுதான் புதிதாக வந்தவர்கள் ஜெயித்தனர். ஊருக்கு ஊர், வீதிக்கு வீதி, வீட்டுக்கு வீடு என்ற அனைத்து மக்களையும் சந்தித்தனர்.

அண்ணா சொன்ன அதே விஷயத்தை நானும் இங்கே சொல்ல விரும்புகிறேன். மக்களிடம் செல், மக்களிடமிருந்து கற்றுக் கொள், மக்களுடன் வாழ், மக்களுடன் சேர்ந்து திட்டமிடு. இதைச் சரியாக செய்தாலே போதும். அதனால்தான் இந்தச் செயலியை அறிமுகப்படுத்துவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இதன் பிறகு மதுரை மாநாடு, மக்கள் சந்திப்பு, பயணம் என மக்களோடு மக்களாகத்தான் இருக்கப் போகிறோம். நம்முடன் மக்கள் இருக்கிறார்கள். நல்லதே நினைப்போம். நல்லதே நடக்கும். வெற்றி நிச்சயம்." இவ்வாறு விஜய் பேசினார்.

முன்னதாக 'வெற்றிப் பேரணியில் தமிழ்நாடு' என்ற இந்த உறுப்பினர் சேர்க்கைக்கான செயலியை வெளியிட்ட விஜய், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று தலைமுறையினருக்கு தவெக உறுப்பினர் அட்டையை வழங்கினார்.



■ இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் தமிழ்நாடு கடல்சார் வாரியம் மூலம் ரூ.4.19 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட துறைமுக அலுவலக கட்டடத்தை மாண்புமிகு பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மரு.ஆர்.செல்வராஜ்,இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு கடல்சார் வாரிய முதன்மைச் செயலாளர்/துணைத்தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் திரு.தி.ந.வெங்கடேஷ்.இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.செ.முருகேசன் அவர்கள் ஆகியோர் உள்ளனர்.

## மு.க.ஸ்டாலின் மக்கள் நலன்களை பலி கொடுத்து செந்தில் பாலாஜியை பாதுகாக்க முயல்கிறார்: அன்புமணி

சென்னை: ஜூலை.31-

ஊழல் வழக்கிலிருந்து செந்தில் பாலாஜியை காப்பாற்ற திமுக அரசு முயல்வதாக உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. இதனால மக்களிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் மன்னிப்பு கேட்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திமுகவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி மீதான வேலைக்கு பணம் வாங்கி மோசடி செய்த வழக்கில் இருந்து அவரைக் காப்பாற்றும் நோக்கத்துடன் தான், அந்த வழக்கில் அவரிடம் பணம் கொடுத்து ஏமாந்த அப்பாவிகள் உள்ளிட்ட 2 ஆயிரம் பேரை அந்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களாக திமுக அரசு சேர்த்திருக்கிறது என்றும், இது நீதி வழங்கும் அமைப்பின் மீது நடத்தப்படும் மோசடி என்றும் உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்திருக்கிறது.



குற்றம் செய்தவர்களைத் தண்டித்து அப்பாவிகளை பாதுகாக்க வேண்டிய தமிழக அரசு, அப்பாவிகளைத் தண்டித்து குற்றம் செய்தவர்களை பாதுகாக்க முயல்வது கண்டிக்கத்தக்கது. 2014ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் 5 கோட்டங்களில் 1630 பணிகளுக்கான ஆள்தேர்வு அறிவிக்கை வெளியிடப்பட்ட நிலையில், நடத்துநர் பணிக்கு ரூ.1.75 லட்சம் தொடங்கி உதவிப் பொறியாளர் பணிக்கு ரூ.12 லட்சம் வரை செந்தில் பாலாஜி கையூட்டு வாங்கிக் குவித்ததாக அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், செந்தில்பாலாஜி அவரது செல்வாக்கைப் பயன்படுத்தி , தம்மீது புகார் கொடுத்த அனைவருக்கும் பணத்தைக் கொடுத்து, புகார்களை திரும்பப் பெறச் செய்தார். இதை சென்னை உயர் நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டு அவரை விடுதலை செய்தது. ஆனால், அதை ஏற்க மறுத்த உச்ச நீதிமன்றம் செந்தில் பாலாஜி மீது மீண்டும் வழக்கு தொடர்ந்து நடத்த வேண்டும் என்று ஆணையிட்டது.

அதனடிப்படையில் வழக்குப் பதிவு செய்த திமுக அரசு, செந்தில் பாலாஜி மற்றும் அவருக்கு துணையாக இருந்தவர்களை மட்டும் குற்றச்சாட்டப்பட்டவர்களாக சேர்க்காமல், அவரிடம் பணம் கொடுத்து ஏமாந்தவர்களையும் வழக்கில் சேர்த்திருக்கிறது. இதைத் தான் உச்ச நீதிமன்றம் கண்டித்திருக்கிறது.

ஒரு வழக்கில் 2000 பேர் குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக சேர்க்கப்பட்டால், செந்தில்பாலாஜியின் வாழ்நாள் முடியும் வரை இந்த வழக்கின் விசாரணை முடியாது என்பதற்காகத் தான் திமுக அரசு இவ்வாறு செய்ததாக உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. இதற்காக காவல்துறையை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் இப்போது தெரிவித்திருக்கும் கருத்தைக் கடந்த காலங்களில் பலமுறை பாமக தெரிவித்துள்ளது. அதுமட்டுமின்றி செந்தில் பாலாஜி செய்தது ஊழல் என்று என்று பாமக குற்றஞ்சாட்டி வந்த நிலையில், அவர் செய்தது தியாகம் என்று கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் சான்றிதழ் அளித்த முதல்வர் ஸ்டாலின், செந்தில் பாலாஜியின் தியாகத்தைப் போற்றும் வகையில் அவருக்கு அமைச்சர் பதவியும் வழங்கினார். இதற்கும் பாமக கண்டனம் தெரிவித்திருந்த நிலையில், செந்தில் பாலாஜி அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்படுவதையும் உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது.

ஒரு மக்கள் நல அரசு மக்களுக்கு ஆதரவாகத் தான் செயல்பட வேண்டும். ஆனால், முதல்வர் மு.க.ஸ்டாலின் மக்களின் நலன்களை பலி கொடுத்து செந்தில் பாலாஜியை பாதுகாக்க முயல்கிறார். இதற்கு உச்ச நீதிமன்றமே கண்டனம் தெரிவித்திருக்கும் நிலையில், தமது நீதி தவறிய செயலுக்காக தமிழக மக்களிடம் அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

அதுமட்டுமின்றி, செந்தில் பாலாஜி மீதான மோசடி வழக்கிலிருந்து அவரிடம் பணம் கொடுத்து ஏமாந்தவர்களை நீக்கி விட்டு, செந்தில் பாலாஜி உள்ளிட்டோர் மீதான வழக்கை வேறு மாநில நீதிமன்றத்துக்கு மாற்றி தமிழக அரசு ஆணையிட வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.



■ திருப்பூர் மாவட்டம் பார்வை இழப்பு தடுப்பு சங்கம், திருப்பூர் மாவட்ட டூரிஸ்ட் வேன் கார் ஆட்டோ ஓட்டுநர்கள் உரிமையாளர்கள் சங்கத்தின் முன்னெடுப்பில், திருப்பூர் தி ஐ பவுண்டேசன், ஸ்ரீசரண் மெடிக்கல் சென்டர் சார்பில்,தமிழக அரசின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இணைந்து நடத்திய மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் மற்றும் பொது மருத்துவ முகாமை இன்று வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் மேயர் ந.தினேஷ்குமார் துவக்கி வைத்தார். உடன் வடக்கு மாநகர பொறுப்பாளர் தங்கராஜ் அவர்களும், பகுதி செயலாளர் ஜோதி வடக்கு மாநகர துணைச் செயலாளர் ராமசாமி வட்ட செயலாளர் செந்தில் கேபிள் ராஜ் கருப்புசாமி TTADO தலைவர் பெஸ்ட் சண்முக வேல் மற்றும் கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.



■ மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி, என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில், தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் / திட்டங்களை அவர்களின் இல்லங்களுக்கு அருகிலேயே சென்று வழங்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர்,கழகத் தலைவர் தளபதி "உங்களுடன் ஸ்டாலின்"திட்டத்தை, திருப்பூர் வடக்கு மாவட்டம் வடக்கு ஒன்றியம்,தொரவலூர் பகுதியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் மேயர் ந.தினேஷ்குமார் பார்வையிட்டு இச்சிறப்பான திட்டத்தில் பயன்பெற்ற மக்களுக்கு உடனடியாக சான்றிதழ்களை வழங்கினர். உடன் ஒன்றிய கழக செயலாளர் விஸ்வநாதன், மாநில பிரச்சார குழு நிர்வாகி உமாமகேஸ்வரி, பொதுக்குழு உறுப்பினர் கணக்கம்பாளையம் தலைவர் சண்முகசுந்தரம் மற்றும் கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.




## திருநெல்வேலி மென்பொறியாளர் கொலை: நாகர்கோவிலில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆர்ப்பாட்டம்

நாகர்கோவில், ஜூலை.31

திருநெல்வேலியில் மென்பொறியாளர் கவின்குமார் சோகம் அளிக்கும் சாதி ஆணவக் கொலையின் பேரில், குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கும் விதமாகவும், ஆணவக் கொலைகளை தடுக்கும் புதிய சட்டம் இயற்ற தமிழக அரசை வலியுறுத்தும் வகையிலும், நாகர்கோவில் வேப்பமூடு பூங்கா அருகில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டம் நாகர்கோவில் மாநகர மாவட்டச் செயலாளர் அல்காலித் தலைமையில் நடைபெற்றது. இதில் தென் மண்டல துணைத் தலைவர் பகலவன், இளஞ் சிறுத்தை எழுச்சி பாசறை மாவட்ட அமைப்பாளர் ஹமீது பயாஸ், கிழக்கு மண்டல பகுதி செயலாளர் செல்வராஜ், தெற்கு மண்டல பகுதி செயலாளர் சதீஷ் பாபு, மேற்கு மண்டல பகுதி செயலாளர் ஞானசேகர், வடக்கு மண்டல பகுதி செயலாளர் றி. சதீஷ் பாபு, ஊக ஒருங்கிணைப்பாளர் தொல்காப்பியன், சமூக ஊடக மாவட்ட பொறுப்பாளர் யுவன் ராஜன், மகளிர் விடுதலை இயக்க மாவட்ட துணை அமைப்பாளர்கள் செல்வி, சல்பேஸ்வரி, சி. பி. ஐ. எம். எல் ரெட் ஸ்டார் மாவட்ட தலைவர் மணவை கண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

ஆணவ கொலைகள் எதிராக உரிமை கோரிய இப்பொது ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான சிறுத்தைகள் உற்சாகமாக பங்கேற்றனர். மாநில அரசின் மௌனத்தையும், நீதிக்கான தேவை குறித்தும் பேசப்பட்ட இந்த நிகழ்வில், சமூக நீதிக்கு ஆதரவாக பல கோஷங்களும் எழுப்பப்பட்டன.



■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 41 வது வார்டுக்குட்பட்ட ஜெமிலா தெரு மற்றும் அம்மன் கோவில் முன்புற தெருவில் ரூ.6.85 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியினை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார். உடன் மண்டல தலைவர் . அகஸ்டினா கோகிலவாணி மாமன்ற உறுப்பினர் அனிலா. உதவி செயற்பொறியாளர் ரகுராமன். பகுதி செயலாளர் துரை. செயற்குழு உறுப்பினர் சதாசிவம். தி மு க நிர்வாகிகள் ஆறுமுகம்.அஜித். மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் தி மு க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

நெற்குப்பையிலிருந்து வேந்தன்பட்டி செல்லும் வழியில் உள்ள பள்ளத்துப்பட்டி செம்பன் என்பவரிடம் எட்டு செப்பேடுகள் இருப்பதாக கிடைத்த தகவலை தொடர்ந்து

## குரோம்பேட்டை அருள்மிகு நவசக்தி சுயம்பு துர்கை அம்மன் திருக்கோயில் ஆடிப்புர சிறப்பு வழிபாடு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது

குரோம்பேட்டை. ஜூலை.31

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை ஏரிக்கரை தெரு லட்சுமிபுரத்தில் அமைந்துள்ள அருள்மிகு நவசக்தி சுயம்பு துர்கை அம்மன் திருக்கோவில் ஆடி மாதம் அம்பாளை வழிபாடு செய்வதற்க்கான உகந்த மாதமாகும் இந்த மாதத்தில் வரும் பூரம் நட்சரத்தில் அம்மன் அவதரித்தாக சொல்லபடுகிறது. அன்றைய தினம் அம்மன் கோயில்களில் அனைத்திலும் சிறப்பு வழிபாடு நடைபெறுவதோடு அம்பாளுக்கு வளையள்கள் அணிவிக்கும் நிகழ்வும் நடத்தபடும். அந்த வகையில்

குரோம்பேட்டை ஏரிக்கரை தெரு லட்சுமிபுரத்தில் அமைந்துள்ள அருள்மிகு நவசக்தி சுயம்பு துர்கை அம்மன் திருக்கோவில் ஆடிப்பூரத்தை யொட்டி அம்மனுக்கு வளையள்களால் அலங்காரம் செய்து சிறப்பு பூஜை தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.



காமராஜ் மற்றும் குடும்பத்தினர் தலைமையில் வெகு விமர்சியாக நடைபெற்றது இதில் ஆடிபுரா திருவிழாவில் சிறப்பு வேல்வி, சிறப்பு அபிஷேகம், கன்னி பூஜை, கன்னியா பூஜை, சுமங்கலி பூஜைகள் என பல்வேறு பூஜைகள் சிறப்பாக நடைபெற்றது இதில் கோயில் நிர்வாகிகள் மற்றும் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பெண்கள் உட்பட கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர். பின்னர் அன்னதானம் வழங்கப்பட்டது. முன்னதாக இந்த ஆடிப்பூர திருவிழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு ஸ்ரீ பாலாஜி மருத்துவக் கல்லூரி தாளாளர்கள் நா.இளமாறன் மற்றும் ஜெ.இராஜலட்சுமி இளமாறன், சந்திப் ஆனந்த், மலர்மங்கை, மருத்துவர் அரவிந்தராஜ், அருள்ராஜ் ஆகியோர் குடும்பத்தினர் சார்பில் சுமார் 1000 நபர்களுக்கு மங்கள பொருட்கள் மற்றும் புடவையுடன் பிரசாதம் வழங்கப்பட்டது

## வேலூர் புறநகர் மாவட்டத்தில் கே.வி.குப்பம் கிழக்கு மேற்கு ஒன்றியத்தில் அதிமுக சார்பில் ஆலோசனை கூட்டம்

வேலூர். ஜூலை.31

வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் தாலுகா, கே வி குப்பம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றியத்தில் கிழக்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ. லோகநாதன் மற்றும் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.எம்.ஐ சீனிவாசன் ஆகியோர் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் மத்திய அமைச்சரரும், கழக அமைப்பு செயலாளர் செஞ்சி நா.ராமச்சந்திரன், காஞ்சிபுரம் மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளரும், மண்டல தேர்தல் பொறுப்பாளருமான சதீஷ் சங்கர், மாநில அமைப்பு



செயலாளர் வி.ராமு மற்றும் புறநகர் மாவட்ட செயலாளர் த.வேலவன் ஆகியோர் கலந்து கொண்டு கே வி குப்பம் ஒன்றிய அதிமுக நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் மற்றும் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் முதல்வர், அதிமுக பொதுச் செயலாளரும், தமிழக எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி கே. பழனிசாமி, தமிழகத்தை மீட்போம்!!மக்களை காப்போம்!!!என்ற பிரச்சார எழுச்சி பயணம் குறித்தும், வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் அதிமுக வெற்றி பெற, பிரச்சார பயணமாக வருகின்ற ஆகஸ்ட் 14ஆம் தேதி கே.வி.குப்பம் தொகுதிக்கு வருகை தருவதையொட்டி அதிமுக நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் அரசு விதிமுறைக்குட்பட்டும் மற்றும் கட்சி விதிமுறைக்குட்பட்டும் நாம் செயல்முறைப்படுத்தப்பட வேண்டும் என பேருரையாற்றி இந்த ஆலோசனைக் கூட்டத்தை சிறப்பித்தனர்.

## உலக அளவில் புகழ்பெற்ற ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடத்தில் ரூ.10 லட்சம் மதிப்பிலான செயற்கை கால்களை ஸ்ரீ சத்தி அம்மா பயனாளி தினேஷுக்கு வழங்கி ஆசீர்வதித்தார்



வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, அரியூர் அடுத்த திருமலைக்கோடி, உலக அளவில் புகழ்பெற்ற ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடத்தில், ஸ்ரீ சக்தி அம்மா, சென்னையை சேர்ந்த சாலை விபத்தில் இரு கால்களையும் இழந்த பள்ளி மாணவர் தனுஷுக்கு ஸ்ரீ நாராயணி பீடம் சார்பாக ரூபாய் 10 லட்சம் மதிப்பிலான செயற்கை கால்களை ஸ்ரீ சக்தி அம்மா வழங்கி ஆசீர்வதித்தனர். இந்நிகழ்வின் போது பெற்றோர்கள் மற்றும் ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடம் பொது மேலாளர் சம்பத்து, அலுவலர்கள் பணியாளர்கள் பக்தர்கள் என பலர் உடனிருந்தனர்.

## கூகுள் மேப் செய்த வேலை: தேவாலய படிக்கட்டில் சிக்கிக் கொண்டது கார்

மூணாறு, ஜூலை.31-

மூணாறில், கூகுள் மேப் உதவியுடன் செல்ல நினைத்து தேவாலய படிக்கட்டில் கார் சிக்கிக்கொண்டதால் பரபரப்பு ஏற்பட்டது.கேரள மாநிலம் கோட்டயம் பகுதியைச் சேர்ந்த 4 பேர், இரு தினங்களுக்கு முன் மூணாறுக்கு காரில் சுற்றுலா வந்துள்ளனர்.

இரவு எட்டு மணி அளவில் நகர் பகுதியில் போக்குவரத்து நெரிசல் இருந்ததால், கூகுள் மேப் உதவியுடன் மாற்றுப் பாதையில் பயணிக்க முடிவு செய்தனர். இதனையடுத்து கூகுள் மேப் உதவியுடன் காரை, டிரைவர் இயக்கியுள்ளார். ஹைரேஞ்ச் மருத்துவமனை வழியாக சென்ற போது, மூணாறு மவுண்ட் கார்மல் தேவாலயத்தின் முன்பு வாகனம் நின்றுள்ளது.



தொடர்ந்து வாகனம் செல்லும் வழி முடிந்து படிக்கட்டுகள் மட்டுமே இருந்துள்ளது.இதனைக் கவனிக்காத டிரைவர், தொடர்ந்து காரை இயக்கியுள்ளார். இதனால் தேவாலயத்தின் படிக்கட்டுகள் வழியாக இறங்கிச் சென்ற கார், தேவாலய தடுப்புச் சுவரில் மோதி நின்றது.

படிக்கட்டில் சிக்கிக்கொண்டதால், இருபுறமும் காரின் கதவுகளை திறக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் பயணிகள் உள்ளேயே சிக்கிக் கொண்டனர். அப்பகுதியினர், காரின் ஜன்னல் வழியாக சுற்றுலாப் பயணிகளை பத்திரமாக மீட்டனர். தொடர்ந்து கிரேன் உதவியுடன் கார் அங்கிருந்து மீட்கப்பட்டது.



■ மதுரை மாவட்டம், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம் காவனூர்,வீரபாண்டி,உசிலம்பட்டி மற்றும் கொடிமங்களம் ஆகிய ஊராட்சிகளுக்கு உட்பட்ட பொதுமக்களுக்காக செட்டிகுளம் கிராமத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்து துறை சார்ந்த அரங்குகளில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு மனுதாரர்களுடன் கலந்துரையாடினார்.மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., வட்டார வளர்ச்சி அலுவலர் பேராட்சி பிரேமா,பொற்செல்வி, வீரபாண்டி ஊராட்சி செயலாளர் கணேசன், கருவூர் ஊராட்சி செயலாளர்தங்க முருகன்உசிலம்பட்டி ஊராட்சி செயலாளர் செண்பகமூர்த்திஉடன் உள்ளார்.

செய்தி மற்றும் விளம்பரங்களுக்கு
இணை ஆசிரியர் : க.சந்திரகுமார்
9585323132



■ மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட எர்ரம்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் தொடங்கி வைத்து பார்வையிட்டு ஆய்வு செய்தார். அலங்காநல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வள்ளி,கலைச்செல்வி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெயபிரகாஷ், சுந்தர்ராஜ், கண்ணன், ரேணுகா, எர்ரம்பட்டி ஊராட்சி செயலாளர் ராஜாங்கம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

# சிவகங்கை மாவட்டம் உயர்கல்விக்கான வழிகாட்டும் மாணவர் சிறப்பு குறைதீர் முகாம் : மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெற்றது



சிவகங்கை, ஜூலை.31-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளிக்கல்வித்துறை சார்பில், உயர்கல்விக்கான வழிகாட்டும் மாணவர் சிறப்பு குறைதீர் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இம்முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

சிவகங்கை மாவட்டத்தில் பள்ளிக்கல்வியை முடித்த அனைத்து மாணவர்களும் உயர்கல்வியில் சேர்வதை உறுதி செய்யும் வகையில், மாணவர்களுக்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் உதவிகளை வழங்கும் வகையில், சிறப்பு குறைதீர் முகாம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறுகிறது.

குறிப்பாக, மாணவர்கள் உயர்கல்வியை கற்பதற்கு தடையாக உள்ள அனைத்து காரணிகளையும் களைவதற்கும், உயர்கல்வி தொடர்பான சந்தேகங்களுக்கு தீர்வு காணுவதற்கும், அனைத்து மாணவர்களும் உயர்கல்வியில் சேர்ந்து பயன்பெறும் வகையில், இம்முகாமானது நடைபெறுகிறது.

உயர் கல்வி என்பது ஒவ்வொரு மாணவரின் வாழ்க்கையிலும், வியக்கத்தகு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாக உள்ளது. மாணாக்கர்கள் பள்ளிப்படிப்பிற்கு பின் தங்களுக்கு பிடித்த துறையை தேர்ந்தெடுத்து, உயர்கல்வியினை அத்துறையில் சிறந்த முறையில் பெறுவது தங்களது வாழ்வின் சிறப்பிற்கு மட்டுமன்றி, நல்ல வேலைவாய்ப்பினை பெறுவதற்கும் அடிப்படையாக



அமைகிறது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணாக்கர்கள் பள்ளிப்படிப்பை முடித்த பின்பு எவ்வித இடைநிற்றலுமின்றி, உயர்கல்வி பயில வேண்டும் என்ற உரிய நோக்கில் பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்து, கல்லூரி, ஐடிஐ மற்றும் பாலிடெக்னிக் போன்ற உயர்கல்வியில் சேரும் மாணாக்கர்களுக்கு புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் போன்ற திட்டங்களின் மூலம் மாதம் ரூ.1,000/ வழங்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமன்றி, தமிழ்நாடு அரசு மாணாக்கர்கள் உயர்கல்வியினை சிறந்த முறையில் பயில்வதை ஊக்குவிக்கின்ற வகையில், பல்வேறு உதவித்தொகைகளையும் வழங்கி வருகிறது.

இம்முகாமில், துணைத்தேர்வு எழுதிய மாணவர்கள், உயர்கல்வியில் சேராத மாணவர்கள், பெற்றோர்களை இழந்த மாணவர்கள் என 47க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு, உயர்கல்வியில் சேர்வது மற்றும் படிப்பது தொடர்பான தங்களின் சந்தேகங்கங்களுக்கு ஏற்ற தீர்வினை பெற்றுள்ளனர். குறிப்பாக, உயர்கல்விக்கு விண்ணப்பிக்காத 20 மாணவர்களுக்கு உடனடி சேர்க்கையும் இம்முகாமின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில், 12 மாணவர்களுக்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், 7 மாணவர்களுக்கு ஐடிஐ தொழிற்பயிற்சி நிறுவனங்களிலும், 1 மாணவருக்கு பாலிடெக்னிக் கல்லூரியிலும் உடனடி சேர்க்கை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இதுவரை உயர்கல்விக்கு விண்ணப்பிக்காமல் இருந்த மாணவர்களுக்கு பாராமெடிக்கல் படிப்பிற்கு உயர்கல்வி வழிகாட்டல் மையம் மூலம் விண்ணப்பிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டது. உயர்கல்விக்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான சான்றிதழ்களான பிறப்புச் சான்றிதழ், சாதி சான்றிதழ், முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ், வருமான சான்றிதழ் போன்றவைகள்,

தேவைப்படும் மாணவர்களுக்கு இசேவை மையம் மூலம் பெறுவதற்கும் இம்முகாமின் வாயிலாக ஏற்பாடு செய்யப்பட்டு, அதன் மூலம் தேவையான மாணவர்கள் விண்ணப்பித்தனர்.

பெரும்பாலான மாணவர்கள் உயர்கல்வியை படிக்க பொருளாதார தேவையினை கோரிக்கையாக வைத்தனர். அதற்கென, கல்வி கடன் தேவைப்படக்கூடிய மாணவர்களுக்கு, மாவட்ட முன்னோடி வங்கி மூலமாக பிம்ஸ்ரீ வித்யாலக்ஷ்மி போர்டல் மூலமாக விண்ணப்பிக்க ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.

மாணாக்கர்கள் உயர்கல்வி பெற்று, தங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தி கொள்வதற்கு அடிப்படையாக விளங்கி வரும் உயர்கல்வியை தரமானதாகவும், இடைநிற்றலின்றியும் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கில் தமிழக அரசால் பல்வேறு திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனை மாணாக்கர்கள் கருத்தில் கொண்டு, தாங்கள் உயர்கல்வி கற்பதற்கு இதுபோன்ற முகாம்களை பயன்படுத்திக் கொண்டு அதன் வாயிலாக பயன்பெற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, தெரிவித்தார்.

இம்முகாமில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) மாரிமுத்து, உதவி ஆணையர் (கலால்) ரெங்கநாதன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பிரவீன்குமார், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி ரதிதேவி, கல்வித்துறை அலுவலர்கள், வட்டாட்சியர்கள் மற்றும் மாணவர்கள்,மாணவர்களின் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மங்குஸ்தான் பழ சீசன் தொடங்கியது

குன்னூர், ஜூலை.31-

பழங்களின் ராணி, என்றழைக்கப்படும் மருத்துவ குணம் கொண்ட மங்குஸ்தான் பழ சீசன் தொடங் கியுள்ளது. தற்போது அரசு தோட்டக்கலைப் பண்ணையில் காய்த்து குலுங்குகிறது.

சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். நீலகிரி மாவட்டம், குன்னூர் அருகேயுள்ள பர்லியார் பகுதியில் அரசு தோட்டக்கலை பண்ணையில் பழங்களின் ராணி என்று அழைக்கப்படும் அரிய வகையான மங்குஸ்தான் பழ சீசன் தற்போது தொடங்கியுள்ளது.

பர்லியார் தோட்டக் கலைப் பண்ணையில் உள்ள மரங்களில் தற்போது இந்த பழங்கள் காய்த்து குலுங்குகிறது. இந்த மங்குஸ்தான் பழங்களை பர்லியார் மற்றும் குன்னூர் சாலையோர பழக்கடைகளில் விற்பனைக்காக வைத்துள்ளனர்.



இந்த மங்குஸ்தான் பழம் மருத்துவ குணம் கொண்டதாக கருதப்படுகிறது. உடலில் உள்ள விஷத்தை முறிக்கும், தோல் சம்மந்தப்பட்ட நோய்களை குணப்படுத்தும், கண் எரிச்சலை நீக்கும் மற்றும் இதர பல்வேறு நோய்களை குணப்படுத்தும் தன்மையுடையது.இந்த பழம் இந்தோனே சியாவில் மொலாக்க பகுதியை தாயகமாக கொண்டது. இதனை அவர்கள் ‘குயின் ஆப்பிள்’ என்று அழைப்பார்கள். சிகப்பு கரு நீலத்தில் உள்ள இந்த பழம் உள்பக்கம் வெள்ளை நிறத்தில் ஆரஞ்சு சுளைகள்போல் இருக்கும். பழத்தின் உள்ளே எத்தனை சுளைகள் உள்ளது என் பதை பழத்தின் அடி பகுதியில் உள்ள வட்டவடிவிலான அடையாளம் காட்டி விடும். இது எந்த ஒரு பழத்திலும் இல்லாத ஒரு சிறப்பம்சமாகும். இனிப்பும், புளிப்பும் கலந்து சுவையாக இருக்கும். இந்த பழம் தற்போது ஒரு கிலோ 300 ரூபாய்க்கு விற்பனை செய்து வரும் நிலையில், இதை சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர்.

# கன்னியாகுமரி மாவட்டத்தினை குப்பையில்லா மாவட்டமாக மாற்றியதில் தூய்மை பணியாளர்களின் அர்ப்பணிப்பு மிகவும் மதிக்கதக்கது : துய்மை பணியாளர்களுடான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய தலைவர் டாக்டர்.திப்பம்பட்டி.வெ.ஆறுச்சாமி பெருமிதம்

கன்னியாகுமரி, ஜூலை.31-

கன்னியாகுமரி மாவட்ட ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழகம் (தாட்கோ) துறையின் சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் அவர்களுடான கலந்துரையாடல் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர்ஆர்.அழகுமீனா, தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய தலைவர் டாக்டர்.திப்பம்பட்டி. வெ.ஆறுச்சாமி அவர்கள், தூய்மை பணியாளர்களுடன் கலந்துரையாடி நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசுகையில்

தூய்மை பணியாளர்களின் நலனில் அக்கறை கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தூய்மை பணியாளர்களுக்கு பல்வேறு நல திட்டங்களை உருவாக்கி சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் தூய்மை பணியாளர்களாக பணியாற்றிக் கொண்டிருப்பவர்களை தொழில் முனைவோராக மாற்றக்கூடிய அற்புதமான திட்டத்தினை செயல்படுத்தியுள்ளார்கள்.

நமது மாவட்டத்திற்குட்பட்ட மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் உள்ளிட்ட பகுதிகளை சுத்தமாகவும், ஆரோக்கியமாக வைத்திருப்பதில் தூய்மை பணியாளர்களின் பங்கு மிகவும் மகத்தானது. இருப்பினும் சமூகத்தில் துஸய்மை பணியாளர்கள் குடும்பத்தினர் பல்வேறு பொருளாதார சவால்களை எதிர்கொள்கிறார்கள். தூய்மை காவலர்களின் வாழ்வினை மேம்படுத்தவும், அவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்



தூய்மை பணியாளர்களுக்கென நலவாரியத்தினை அமைத்து, அவர்களின் வாரிசுதார ர்கள் உயர்கல்வி பயின்று வாழ்வில் ஏற்றம் பெற வேண்டுமென்ற உயரிய நோக்கில் பல்வேறு நலத்திட்டங்களை வழங்க ஆணையிட்டதோடு, தூய்மை பணியில் ஈடுபடும் அனைவரும் நோய் நொடியின்றி பணிபுரிவதை உறுதி செய்தார்கள்.

அதனடிப்படையில் தூய்மை பணியாளர் நலவாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு பணியிடத்தில் விபத்து, மரணம் உறுப்புகளை இழத்தால், சரிசெய்ய இயலாத அளவுக்கு இழப்பு ஏற்பட்டால் இழப்புத்தொகையாக ரு.5 இலட்சமும், ஒரு கை, ஒரு காலினை இழந்தாலோ, ஒரு கண் முழுவதும் சரி செய்ய முடியாத அளவுக்கு பார்வை இழப்பு ஏற்பட்டலோ ரூ.1 இலட்சமும், இயற்கை மரண தொகை ரூ.20,000மும், ஈமச்சடங்கு உதவித்தொகை ரூ.5000 என விபத்துக்காப்பீடு வழங்கப்படும்.

மேலும் இயற்கை மரண உதவித்தொகை ரூ.20,000, ஈமச்சடங்கு உதவித்தொகை ரூ.5000, கல்வி உதவித்தொகையாக 10 வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்), 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர், 11ம்வகுப்பு படித்துவரும் (பெண்களுக்கு மட்டும்) ரூ.1000, 12ம் வகுப்பு படித்தும் வரும் (பெண்களுக்கு மட்டும்), 12 ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர், முறையான பட்ட மேற்படிப்பு உள்ளிட்டவைகளுக்கு ரூ.1500ம், விடுதியில் தங்கி படித்தால் ரூ.1750ம், முறையான பட்ட மேற்படிப்பு படித்தவர்களுக்கு ரூ.4000ம், விடுதியில் தங்கி படிப்பவர்களுக்கு ரூ.5000ம், தொழில் நுட்ப பட்டப்படிப்பு ரூ.4000ம், விடுதியில் தங்கி படித்தால் ரூ.6000, தொழில் நுட்ப பட்டமேற்படிப்பு ரூ.6000ம், விடுதியில் தங்கி படித்தல் ரூ.8000, ஐ.டி.ஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு ரூ.1000, விடுதியில் தங்கி படித்தால் ரூ.1200ம் வழங்கப்படும். திருமண உதவித்தொகை தொழிலாளர் (அ) மகன் (அ) மகள் குடும்பத்திற்கு இருமுறை மட்டும் ஆண் எனில் ரூ.3,000, பெண் எனில் ரூ.5000மும், மகப்பேறு உதவி ரூ.3000, கருச்சிதைவு அல்லது கருகலைப்பு ரூ.6000ம், கண் கண்ணாடி உதவி ரூ.500ம், முதியோர் ஓய்வு ஊதியம் ரூ.1000 வழங்கப்படும். எனவே தூய்மை பணியாளர்கள் நலவாரியத்தில் பதிவுசெய்து, நலத்திட்டங்களை பெற கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்ந்து நகராட்சியில் பணியாற்றும் 130 தூய்மை பணியாளர்களுக்கும், பேரூராட்சிகளில் பணியாற்றும் 794 தூய்மை பணியாளர்களுக்கும், ஊராட்சிகளில் பணியாற்றும் 910 தூய்மை பணியாளர்களுக்கும், நகர திட்டமிடல் அலுவலகத்தில் பணியாற்றும் 1 பயனாளிக்ம், அரசு மருத்துவமனை கல்லூரியில் பணியாற்றும் 159 தூய்மை பணியாளர்களுக்கும், கன்னியாகுமரி அரசு மருத்துவமனையில் பணியாற்றும் 3 பணியாளர்களுக்கும், முட்டம் அரசு மருத்துவமனையில் பணியாற்றும் 1 பயனாளிக்கும், நீதிமன்றத்தில் பணியாற்றும் 1 தூய்மை பணியாளர்கள் என மொத்தம் 2,578 தூய்மை பணியாளர்களுக்கு நல வாரிய அட்டை வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 593 ஒப்பந்த பணியாளர்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது

கன்னியாகுமரி மாவட்டத்தில் விபத்து மரண உதவித்தொகை ரூ.1 இலட்சம் 1 பயனாளிக்கும், இயற்கை மரண உதவித்தொகை 4 பயனாளிகளுக்கு ரூ.60,000மும், கல்வி உதவித்தொகை 95 பயனாளிகளுக்கு ரூ.15.67 இலட்சமும், திருமண உதவித்தொகை 3 பயனாளிகளுக்க ரூ.9000மும், ஈமச்சடங்கு உதவித்தொகை 3 பயனாளிகளுக்கு ரூ.6000மும், கண்கண்ணாடி உதவித்தொகை 16 பயனாளிகளுக்கு ரூ.9,250 மகப்பேறு உதவித்தொகை 1 பயனாளிக்கு ரூ.6000மும் என மொத்தம் 123 பயனாளிகளுக்கு ரூ.3.47 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக 10 தூய்மைப்பணியாளர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 2021 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு தூய்மை பணியாளர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கப்பட்டு வருகிறது. வருடந்தோறும் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. தூய்மை பணியாளருக்கான விபத்து நிவாரண உதவி ரூ.5 இலட்சத்தில் இருந்து ரூ.8 இலட்சமாக உயர்த்த வேண்டும் என்று கோரிக்கையை வைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது தமிழ்நாட்டில் ரோபோ இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டு, கழிவுகள் அகற்றப்பட்டு வருகிறது. நமது குமரி மாவட்டத்திற்கு மூன்று ரோபோ இயந்திரங்கள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

தொடர்ந்து தூய்மை பணியாளர்கள் குறைகளை தீர்க்கும் வகையில் மாதம் ஒருமுறை குறைதீர்க்கும் கூட்டம் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் வைத்துள்ளேன் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உடனடியாக பரிசீலினை செய்வதாக தெரிவித்துள்ளார்கள். தூய்மை பணியாளர்களுக்கு விருது வழங்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்துள்ளோம். தூய்மை பணியாளர்களுக்கு உயிர் காக்கும் உபகரணங்களை கண்டிப்பாக பயன்படுத்த வேண்டும். தொடர்ந்து கிராமப்புறங்களில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் ஊதிய உயர்வு வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்கள். இது தொடர்பாக தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. விரைவில் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இன்றைய நிகழ்ச்சியில் மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் 65 பயனாளிகளுக்கு தூய்மை பணியாளர் நலவாரிய அட்டை, 13 பயனாளிகளுக்கு சீருடைகள், 11 பயனாளிகளுக்கு ரூ.72,000 உதவித்தொகை, 19 பயனாளிகளுக்கு பயணியர் ஆட்டோ, பயணியர் கார் உள்ளிட்ட பல்வேறு தொழில்களுக்கு ரூ.84.12 இலட்சம் மதிப்பில் தாட்கோ கடன், 17 பயனாளிகளுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கபட்டுள்ளது. தூய்மை காவலர்களின் குழந்தைகள் முறையான கல்வி பெறுவதை உறுதிசெய்ய கல்வி உதவித்தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது. உங்கள் குழந்தைகளை நன்றாக படிக்க வையுங்கள். தூய்மை பணியாளர்களாகிய நீங்கள் தூய்மை பணியில் ஈடுபடும் போது கையுறைகள், சீருடைகள் அணிய வேண்டும். மாதந்தோறும் நடைபெறும் மருத்துவ முகாம்களில் கலந்து கொள்ள வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தினை குப்பையில்லா மாவட்டமாக மாற்றியதில் தூய்மை பணியாளர்களின் அர்ப்பணிப்பு மிகவும் மதிக்கதக்கது. இவ்வாறு தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய தலைவர் டாக்டர். திப்பம்பட்டி.வெ.ஆறுச்சாமி அவர்கள் பேசினார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைமை செயல் அலுவலர் கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப., (ஓய்வு) நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., நாகர்கோவில் மாநராட்சி துணை மேயர் திருமதிமேரி பிரின்சி லதா, மாவட்ட தாட்கோ மேலாளர்தெய்வக் குருவம்மாள், உதவி இயக்குநர்கள் இராமலிங்கம் (பேரூராட்சிகள்), அன்பு (ஊராட்சிகள்), உதவி மேலாளர் ராஜா, நகராட்சி ஆணையாளர்கள், தூய்மை பணியாளர் நல வாரிய உறுப்பினர்கள் மூக்கையா, விஜய் சுந்தர், துறை அலுவலர்கள், தூய்மை பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



## கே.வி.குப்பம் தாலுகா பி.கே.புரத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

வேலூர். ஜூலை.31

வேலூர் மாவட்டம், கீ.வ.குப்பம் ஊராட்சி ஒன்றியம், பி.கே.புரம் தனியார் மஹாலில் நடைபெற்று வரும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் அசோக்குமார், ஒன்றியக்குழு உறுப்பினர் சீதாராமன், கீ.வ.குப்பம் வட்டாட்சியர் பலராமன், பிரதிநிதிகள், சமூக நலன் துறை, வேளாண்மை துறை, வருவாய்த்துறை, மின்சாரத்துறை, திருநாளிகள் துறை போன்ற தமிழக அரசின் அனைத்து அரசு துறை குறை தீர்வு முகாமில் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு பொதுமக்களின் புகார் மனுக்களை பதிவேற்றம் செய்தனர்.



## வேலூர், கருகம்பத்தூரில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

வேலூர். ஜூலை.31

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, கருகம்பத்தூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் ராயல் பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் நந்தகுமார், கலந்துகொண்டு முகாமை பார்வையிட்டு பின்னர் பயனாளிகளுக்கு முதல்வர் மருத்துவ காப்பீட்டு அட்டையை வழங்கினர். மேலும், இம்முகாமில் வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார், வேலூர் வட்டாட்சியர் வடிவேலு, வேலூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் அமுதா ஞானசேகரன், வேலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வின்செண்ட் ரமேஷ்பாபு, பூம்பாவை, ஒன்றிய குழுஒன்றிய உறுப்பினர் நதியா தசரதன், திமுக பொருளாளர் கி.கோ ராமலிங்கம், பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் விஜயன், ஏஜாஸ், 7வது வார்டு ஊராட்சி உறுப்பினர் எஸ்.கௌவுசர் சலாம், 8வது வார்டு ஊராட்சி உறுப்பினர் வெண்மதிராஜி, உள்ளிட்ட துணை வட்டாட்சியர்கள் வருவாய் ஆய்வாளர்கள் கிராம நிர்வாக அலுவலர்கள் கிராம நிர்வாக உதவியாளர்கள் மகளிர் உரிமைத்துறை, கலைஞர் உரிமைத்தொகை, சுகாதாரத்துறை, மாற்றுத்திறனாளிகள் நல துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சமூக நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையினர் நலத்துறை, மின்சாரத்துறை, கால்நடைத்துறை, வேளாண்மைதுறை வருவாய் துறை மற்றும் அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டு மக்களின் புகார் மனுக்களை பதிவேற்றம் செய்து கொண்டனர். இதில் பொதுமக்கள் பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர்.




## வேப்பூர் ஸ்ரீ ராகவேந்திரா பாலிடெக்னிக் கல்லூரியில் மதுபோதை குறித்து விழிப்புணர்வு!!

வேலூர், ஜூலை.31-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா வேப்பூர் ஊராட்சி ஸ்ரீ ராகவேந்திரா பாலிடெக்னிக்கில் கல்லூரியில் நியூ லைப்ரெஸ்டிரண்டு நிறுவனர் கே.கே. சிவசண்முகம் தலைமையில் (NGO) போதைப் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. இதில் கல்லூர் முதல்வர் திருமாள் முன்னிலையும், சிறப்பு அழைப்பாளராக கே.எஸ். பாபு, குரு ராகவேந்திரா பாலிடெக்னிக் கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தார்.



■ மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட கீழசின்னம்பட்டி, கொண்டையம்பட்டி,கல்வேலிப்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் தொடங்கி வைத்து பார்வையிட்டு ஆய்வு செய்தார். அலங்காநல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வள்ளி,துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெயபிரகாஷ், சுந்தர்ராஜ், கண்ணன், ரேணுகா,அலங்காநல்லூர் பேரூராட்சி தலைவர் ரேணுகா ஈஸ்வரி, கல்வேலிபட்டி ஊராட்சி செயலாளர் செல்வம்,மற்றும் ஊராட்சி செயலாளர்கள் ராஜேஷ், தயா,திமுக நிர்வாகி,ராகுல், மருது மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## சோழிங்கநல்லூர் 198 வது வட்டம் காரப்பாக்கத்தில் "உங்களுடன் ஸ்டாலின் முகாம்"

காரப்பாக்கம். ஜூலை:31

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதி : இடம் சென்னை மாநகராட்சி, அண்ணா தெரு, காரப்பாக்கம்,சமுதாய நலக்கூடம், ஜூலை (31) "உங்களுடன் ஸ்டாலின் முகாம்" தமிழக முதல்வர், மு .க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் , உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த் ரமேஷ் தலைமை தாங்கி முகாமை துவக்கி வைத்தார். 198 வது வட்டக் செயலாளர், பா .தேவகுமார் வரவேற்றார். தொடர்ந்து





உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மக்களை தேடி மருத்துவ, எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் என்ற முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் ஊரகப்பகுதிகளில் 15 துறைகள், 46 சேவைகள், நகர்ப்புற பகுதிகள் 13 துறைகள், 43 சேவைகள் சார்ந்த அரசு அதிகாரிகள், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ் .அரவிந்த் ரமேஷ்

பொதுமக்களின் குறைகளை பொறுமையாக கேட்டு அறிந்து மனுக்களாக பெற்று விரைவில் தீர்வு காணப்படும் என்று பொதுமக்களுக்கு உறுதி அளித்தனர். தொடர்ந்து முகாமில் சில துறைகளில் மூலம் உடனுக்குடன் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்ட சான்றிதழை பொது மக்களுக்கு எம்.எல்.ஏ வழங்கினார். விரைவில் பொதுமக்கள் தங்களது மனுக்களுக்கு தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையுடன் பொதுமக்கள் கூறி சென்றனர் குறிப்பிடத்தக்கது.



■ மதுரை மாவட்டம் மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், மஞ்சம்பட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனை தொடர்பான சிறு புகைப்பட கண்காட்சி நடைபெற்றது கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் அரசின் நல திட்ட செய்திகளை கண்டு களித்து மகிழ்ந்தனர்

## 2025-26ம் ஆண்டுக்கான பள்ளி கல்வித்துறை நாள்காட்டி வெளியீடு: அக்டோபரில் தேர்வு அட்டவணை

சென்னை, ஜூலை.31-

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள், தனியார் சுயநிதிப் பள்ளிகளில் மாநில பாடத்திட்டத்தின் கீழ் செயல்படும் அனைத்து வகை பள்ளிகளிலும் ஒவ்வொரு ஆண்டும் பத்தாம் வகுப்பு மற்றும் பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகள் மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடப்பது வழக்கம். கடந்த ஆண்டு தேர்வுகளும் அதேபோல மார்ச் மற்றும் ஏப்ரல் மாதம் நடந்தன. இதற்கான தேர்வு அட்டவணைகளை முன்கூட்டியே கடந்த 2024 அக்டோபர் மாதத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வெளியிட்டார்.



இதுகுறித்து, தனது எக்ஸ் தள பக்கத்தில் அமைச்சர் வெளியிட்டுள்ளதாவது: நடப்பு 2025-26ம் கல்வி ஆண்டுக்கான பள்ளிக் கல்வித்துறையின் நாள்காட்டியை பள்ளிக் கல்வித்துறை வெளியிட்டுள்ளது. அதில் பள்ளிகளின் பணி நாட்கள், அரசு விடுமுறை நாட்கள் மற்றும் காலாண்டு, அரையாண்டுத் தேர்வு மற்றும் பொதுத் தேர்வுகள் நடத்த வேண்டிய தேதிகள் அடங்கிய பக்கங்களை இணைத்துள்ளோம். மேலும், கடந்த ஆண்டு போலவே 2025-26ம் கல்வி ஆண்டுக்கான பத்தாம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 வகுப்புகளுக்கான பொதுத் தேர்வு கால அட்டவணைகள் குறித்த விவரங்கள் அக்டோபர் மாதம் வெளியிடப்படும். இவ்வாறு பதிவிட்டுள்ளார்.








■ சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில்தேசிய சட்ட பணிகள் ஆணைக்குழு மற்றும் தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு செயல் திட்டத்தின்படி முதன்மை மாவட்ட நீதிபதி அறிவொளி அறிவுரையின்படியும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் இளையான்குடி வட்ட சட்டப் பணிகள் குழு இணைந்து இளையான்குடி வட்டார வளர்ச்சி அலுவலக அரங்கில் இளையான்குடி வட்ட சட்டப் பணிகள் குழு தலைவர்/மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் .மணிவர்மன் முன்னிலையில் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு செயலாளர்/சார்பு நீதிபதி திருமதி V.ராதிகா அவர்கள் தலைமையில் "World Day against Trafficking in Person" குறித்த சட்ட விழிப்புணர்வு முகாம் நேற்று நடைபெற்றது. முகாமில் அரசு அலுவலர்கள், வழக்கறிஞர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டுள்ளார்.

## சோழிங்கநல்லூர் தொகுதி ஒட்டியம்பாக்கம் ஊராட்சி அலுவலகத்தில் "உங்களுடன் ஸ்டாலின் முகாம்"

ஒட்டியம்பாக்கம். ஜூலை.31

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம், ஒட்டியம்பாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் ஜூலை (22) "உங்களுடன் ஸ்டாலின் முகாம்" தமிழக முதல்வர், மு .க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் , உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலில், சிறப்பு அழைப்பாளராக சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த் ரமேஷ்

முகாமில் மக்களை தேடி மருத்துவ, எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் என்ற





முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் சார்ந்த அரசு அதிகாரிகள், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ் .அரவிந்த் ரமேஷ்

பொதுமக்களின் குறைகளை பொறுமையாக கேட்டு அறிந்து மனுக்களாக பெற்று விரைவில் தீர்வு காணப்படும் என்று பொதுமக்களுக்கு உறுதி அளித்தனர். தொடர்ந்து முகாமில் சில துறைகளில் மூலம் உடனுக்குடன் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டது. நிகழ்வில் புனித தோமையார் மலை ஒன்றிய செயலாளர், கோவிலம்பாக்கம், ஜி. வெங்கடேசன், ஒன்றிய பெருந்தலைவர் சங்கீதா பாரதி ராஜன், மாவட்ட கவுன்சிலர், என். வேதகிரி, ஒட்டியம்பாக்கம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர், லோகிதாஸ், சித்தாலப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர், எஸ். ரவி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், ஓ.கே. எஸ்.சதீஷ், ஒட்டியம்பாக்கம் ஊராட்சி செயலர், முருகன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்ட முகாமில் பொதுமக்கள் ஆர்வத்துடன் முகாமில் மனுக்களுக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் கூறி சென்றது குறிப்பிடத்தக்கது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161